# மயிலாடுதுறை நகராட்சி

**2018—ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 01—ந்தேதி வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கை.**

**முன்னிலை:— ந. விஸ்வநாதன், பி.எஸ்ஸி, பி.எல்., தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **01.02.2018** | **1)** மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு எல்லைகளை மறுவரையறை செய்து வரைவு மறுவரையறை பட்டியல் வெளியிடப்பட்டு அதன்மீது அரசியல்கட்சி பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோரின் ஆலோசனைகள், கருத்துகள் கடந்த 12.01.2018 தேதிவரை பெறப்பட்டுள்ளது. அவ்வாறு பெறப்பட்ட 44 ஆலோசனைகள் மற்றும் கருத்துகள் பரிசீலனை செய்யப்பட்டு வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு 8 மனுக்கள் ஏற்கப்பட்டு 29.01.2018 அன்று திருச்சியில் நடைபெற்ற மறுவரையறை ஆணைய மண்டல அளவிலான குழுவில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. உறுப்பினர் — செயலர், மறுவரையறை ஆணையம் தமிழ்நாடு சென்னை அவர்களின் ந.க.எண்.3174/2017/EG1. நாள்.31.01.2018—ல் தெரிவித்துள்ளபடி இறுதி வரைவு மறுவரையறை கருத்துருக்கள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் வழியாக தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்திற்கு அனுப்பி வைத்திட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.** 5719/2017/எப்1 | **தீர்மான எண்:270**<br><br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **2)** இந்நகராட்சி குடிநீர் திட்டத்தின்கீழ் கேட்புத்தாள் மற்றும் பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் கேட்புத்தாள் 36 வார்டுகளுக்கு அச்சடித்துக்கொள்ளவும், தணிக்கைக்கு குடிநீர் திட்டத்திகீழ் Demand Register அச்சடித்துக்கொள்ள ஆகும் உத்தேச செலவினம், ரூ.150000 (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும் தொகை நகராட்சி குடிநீர்திட்ட நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** அனுமதிக்கலாம். | **தீர்மான எண்:271**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **3)** இந்நகராட்சி வார்டு எண்.15 கிட்டப்பா நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் உள்ள பழுதடைந்த இரண்டு கட்டிடங்களை மாணவர் மாணவியர்களின் நலன் கருதியும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் அறிவுறுத்தலின்படியும் பொது ஏலம் விட்டு இடித்து அப்புறப்படுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 6061/2017/இ1** | **தீர்மான எண்:272**<br>அனுமதிக்கப்பட்டது |
| | 4) இந்நகராட்சியின் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரின் தரத்தினை பிரதி மாதமும் ஆய்வு செய்திட ஆண்டொன்றிற்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து அவ்வபோது ஆய்வகங்களுக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** 1.அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி ஜனவரி 2018ம் மாத குடிநீர் பரிசோதனைக்கு ரூ.5000/-ஐ அவசர அவசியம் கருதி ஆய்வகத்திற்கு வழங்கியதை மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>**ந.க.எண். 5961/2010/இ2** | **தீர்மான எண்:273**<br>அனுமதிக்கப்பட்டது<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டன. |
| | **5)** இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் ஆறுபாதி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள STP கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Inlet மற்றும் Outlet கழிவு நீர்களை பிரதி மாதமும் ஆய்வு செய்திட ஜுன் 2017 முதல் ஜுன்2018 வரை ஓர் ஆண்டுக்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ.50000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். இதனை இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து அவ்வபோது ஆய்வகங்களுக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** 1.அனுமதிக்கலாம்.<br>2. மாவட்ட சுற்றுசூழல் பொறியியல் த.மா.க.வாரியம், நாகை அவர்களின் Lr.No.DEE/TNPCB/NPM/F.M.S.0523/2017 dt.04.12.17ல் ஜுன் 2017 முதல் அக்டோபர் 2017 வரை பாதாள சாக்கடை கழிவு நீரினை ஆய்வு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.16980/-ஐ செலுத்திட கோரியதன் பேரில் மேற்கண்ட தொகையினை அவசர அவசியம் கருதி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து வழங்கியதை மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.<br>**ந.க.எண். 7724/99/இ2** | **தீர்மான எண்:274**<br>அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டன. |

6) இந்நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 19.01.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்:275**

ஏற்கப்பட்டது

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| பொது நிதி | | | | | |
| 1. | மயிலாடுதுறை நகராட்சி காமராஜர் பேருந்து நிலையத்தினை சீர்செய்யும் பணி. | 2,60,000/- | திரு. E. கண்ணன், மயிலாடுதுறை. | ரூ. 217417.37/– (–)0.022% குறைவு | திரு. E. கண்ணன், மயிலாடுதுறை. |
| | | | திரு. M. காந்தி, மயிலாடுதுறை. | ரூ. 221174.79/– (+) 1.706% அதிகம் | |

அலுவலககுறிப்பு : பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**ந.க.எண்.** 6566/2017/இ1

7) 14வது மத்திய நிதி குழு நிதியின் கீழ் கீழ்கண்ட பணியினை செய்திட 10.01.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளதை தனிஅலுவலரின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்:276**

ஏற்கப்பட்டது

| வ. எண் | வேலையின் விபரம் | ஒப்பந்த மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டைவிட குறைவு/ மதிப்பீட்டைவிட அதிகம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 14வது மத்திய நிதி குழு | | | | | |
| 1. | வார்டு எண்.1, எரிவாயு தகனமேடையை | 15,00,000/- | M/S MHT ENGINEERING CHENNAI. | ரூ. 1480650.00/– (–)0.117% குறைவு | M/S MHT ENGINEERING CHENNAI. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பராமரிக்கும் பணி. | | M/S YES YES JEE ENGINEERING CHENNAI | ரூ. 1528600.00/– (+) 3.118% அதிகம் | |
| 2. | வார்டு எண்.31, மயூரநாதர் கீழ மடவிளாகம் மற்றும் மயூரநாதர் தெற்கு மடவிளாகம் தார்சாலை புதுப்பிக்கும் பணி. | 17,90,000/- | திரு. A. சட்டையப்பன், மயிலாடுதுறை. | ரூ. 1523333.08/– (–)0.163% குறைவு | திரு. A. சட்டையப்பன், மயிலாடுதுறை. |
| | | | திரு. G. சம்மந்தம், மயிலாடுதுறை. | ரூ. 1529091.87/– (+) 0.214% அதிகம் | |
| 3. | வார்டு எண்.26, காசுக்கார தெருவில் தார்சாலை புதுப்பிக்கும் பணி. | 5,10,000/- | திரு. G. உத்திராபதி, மயிலாடுதுறை. | ரூ. 421472.20/– (–)0.161% குறைவு | திரு. G. உத்திராபதி, மயிலாடுதுறை. |
| | | | திரு. D. சிவகுமார், மயிலாடுதுறை. | ரூ. 423480.55/– (+) 0.314% அதிகம் | |

அலுவலககுறிப்பு : **பட்டியலில் கண்டுள்ள கலம் எண்: 6ல் குறிப்பிட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.**

**ந.க.எண். 6487/2017/இ1**

**8)** மயிலாடுதுறை நகராட்சி சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண்.5ல் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் கட்டப்பட்டுள்ள **Pre-processing** Shed–ல் இயந்திரங்கள் வேண்டியுள்ளது. ஆனால் அப்பணியின் மண்ணின் தன்மை மற்றும் வடிவமைப்பு ஆகியவற்றின்படி பணி மேற்கொள்ளப்பட்டதில் அப்பணியின் மதிப்பீட்டிற்குள் முழுமையாக பணி மேற்கொள்ள இயலாத நிலையில் இயந்திரங்கள் நிறுவி திடக்கழிவினை அறிவியல் ரீதியாக கையாள ஏதுவாக தரைதளம் அமைக்கும் பணிக்கு தேவையான மதிப்பீடு தொகை ரூ.8,00,000/–(ரூபாய் எட்டு லட்சம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்:277**

அனுமதிக்கப்பட்டது

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 268/2018/இ1**

| | | |
|---|---|---|
| | **9)** மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.5ல் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணியான 1/3rd Shed– பணியினை அப்பணியின் மதிப்பீட்டிற்குள் முழுமையாக மேற்கொள்ள இயலாததால், மீதம் செய்யப்பட வேண்டிய Truss work மற்றும் Sheet laying work ஆகியவற்றிற்கு தேவையான மதிப்பீடு தொகை ரூ.14,00,000/– (ரூபாய் பதினான்கு லட்சம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 267/2018/இ1** | **தீர்மான எண்:278**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **10)** மயிலாடுதுறை நகராட்சி சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண்.5ல் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் கட்டப்பட்டுள்ள 1/3rd Shed–ல் இயந்திரங்கள் நிறுவ வேண்டியுள்ளது. அவ்விடத்தின் மண்ணின் தன்மை மற்றும் வடிவமைப்பு வரைப்படத்தின்படி பணி மேற்கொள்ளப்பட்டதால் அப்பணியின் மதிப்பீட்டிற்குள் முழுமையாக பணி மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளதால், அப்பணிக்கு தரைத்தளம் (RCC Flooring) அமைக்கும் பணிக்கு உண்டான மதிப்பீடு தொகை ரூ.17,25,000/– (ரூபாய் பதினேழு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 266/2018/இ1** | **தீர்மான எண்:279**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **11)** மயிலாடுதுறை நகராட்சி அலுவலகம் தொடர்பாக மாவட்ட நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்தில் தனியரால் நகராட்சி மீது தொடரப்படும் வழக்குகளை நகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் வழக்காடவும், அதற்குண்டான நீதிமன்ற வழக்கறிஞர் கட்டணத்தை வழக்கறிஞருக்கு வழங்கிட உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண். **6266/2017/பி4.** | **தீர்மான எண்:280**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **12)** மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.31 தரங்கை சாலையில் புதியதாக கட்டப்பட்டுள்ள யாத்திரிகர் தங்கும் விடுதிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் தஞ்சாவூர் அவர்களின் அறிவுரையின்படி சுற்றுசுவர், CC Pavement, பணிகள் மேற்கொள்ள தேவையான மதிப்பீடு தொகை ரூ.9,50,000/–(ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். இதனை நகராட்சியின்பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்..<br><br>**ந.க.எண். 682 /2018/இ2** | **தீர்மான எண்:281**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **13)** இந்நகராட்சியில் வரி வசூலுக்கு தேவையான கையேடுகள், கேட்பு அறிவிப்புகள், புதிய வரிவிதிப்புகளுக்கான கணக்கீட்டு படிவம் ( un assessed & under assessed) மற்றும் குத்தகை இனம் குறித்த ஏல அறிவிக்கை புத்தகம் அச்சடிக்கும் பணிக்கு கீழ்க்கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. | **தீர்மான எண்:282**<br>அனுமதிக்கப்பட்டது |

**விலைப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு;**

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் விலைவிகிதம் | | | |
|---|---|---|---|---|
| | பணியின்பெயர் | நாதன் அச்சகம் , மயிலாடுதுறை. விலை ரூ. | ஜெமினி பிரஸ், மயிலாடுதுறை, விலை ரூ. | கலைஞர் அச்சகம் மயிலாடுதுறை, விலை ரூ. |
| 1 | A4 size CD பிரிண்ட் செய்திட ஒரு பக்கத்திற்கு | 2/– | 2.75/– | 2.5/– |
| 2 | F/S size CD பிரிண்ட் செய்திட ஒரு பக்கத்திற்கு | 2.5/– | 3.50 | 3.00/– |
| 3 | A4 size ராப்பர் பைண்டிங் செய்திட புத்தகத்திற்கு | 50/– | 65/– | 60/– |
| 4 | F/S size ராப்பர் பைண்டிங் செய்திட புத்தகத்திற்கு | 60/– | 75/– | 70/– |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி தந்துள்ள நாதன் அச்சகம், மயிலாடுதுறை என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 3212/2017/அ1.**

| | | |
|---|---|---|
| | **14)** மயிலாடுதுறை நகராட்சியில் 2017–18–ஆம் ஆண்டிற்கு சொத்துவரி வசூல் குறித்து கையேடுகள், கேட்பு அறிவிப்புகள், புதிய வரிவிதிப்புகளுக்கான ( un assessed & under assessed) கணக்கீட்டு படிவம், குத்தகை இனம் குறித்த அறிவிக்கை புத்தகம், அச்சடிக்கும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ. 200000/– (இரண்டு லட்சம் மட்டும்) –ற்கு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 3212/2017/அ1.** | **தீர்மான எண்:283**<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>15) மயிலாடுதுறை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உறவினர்களற்ற அனாதையாக கிடக்கும் பிணத்தை அரசு மருத்துவமனை பிண அறையிலிருந்து எடுத்து சென்று நல்லடக்கம் செய்ய இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு, ஒரு பிணத்திற்கு ரூ. 200/– வீதம் வழங்க 2017–2018 ஆம் ஆண்டிற்கு உத்தேச செலவினத்தொகை 20000/– (இருபதாயிரம்)–க்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: பொது சுகாதாரப்பணியின் அவசரம் அவசியம் கருதி விதி எண்.15–ன்கீழ் பணி மேற்கொண்டதற்கு தனி அலுவலர் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண். 161/2018/எச்2</td><td>தீர்மான எண்:284<br>ஏற்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>16) மயிலாடுதுறை நகராட்சி அம்மா இருசக்கர வாகன திட்டம் 2017–2018–நடைமுறைப்படுத்துதல் மகளிர் திட்ட இயக்குநர் நாகப்பட்டினம் அவர்களின் உத்தரவின்படி விண்ணப்பங்கள் நாதன் அச்சகத்தில் 1000 விண்ணப்பங்கள் அச்சிடப்பட்டதற்கும், வரபெற்ற விண்ணப்பங்களை தனியார் நிறுவனம் மூலம் பணியாளர்களை கொண்டு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யவும் உத்தேச செலவினத்தொகை ரூ. 30000/– (முப்பதாயிரம்)–திற்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.288/2018/எச்2.</td><td>தீர்மான எண்:285<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>17) மயிலாடுதுறை நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு குப்பை அகற்றும் வாகனம் டோசர் டிராக்டர் வாகனம் எண்.TN.51.P3556–க்கு கிளர்ச் பிளேட் மற்றும் டவுன்கியர் பழுதடைந்துவிட்டதால் அதனை வாங்கி மாற்றிட உத்தேச செலவினம் ரூ.12000/– (பணிரெண்டாயிரம்)–த்திற்கு மன்ற அனுமதியும், பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை மேற்கொள்ளவும் தொடர்புடைய நிறுவனங்களிடம் உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளி வரப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி<br>ரூ</th></tr>
<tr><td>1</td><td>திருப்பதி ஆட்டோ பார்ட்ஸ் வண்டிக்காரத்தெரு, மயிலாடுதுறை.</td><td>ரூ. 12150/–</td></tr>
<tr><td>2</td><td>RGR அக்ரோஸ் பேர்ஸ்<br>மாயூரநாதர் கீழவீதி,<br>மயிலாடுதுறை.</td><td>ரூ. 11950/–</td></tr>
</table>
<br>இதில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண். 2–ல் கண்டுள்ள RGR அக்ரோஸ் பேர்ஸ் மயிலாடுதுறை என்ற நிறுவனத்தில் பணி உத்தரவு வாங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட பணியினை மேற்கொண்டதற்கு தனி அலுவலரின் பின்னேற்பு வழங்கலாம்.<br>ந.க.எண்.5045/2017/எச்1</td><td>தீர்மான எண்:286<br>அலுவலக குறிப்புகள் ஏற்கப்பட்டன</td></tr>
</table>